மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி.
முன்னிலை–திரு.C.கருப்பசாமி, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி
2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் நாள், திங்கட்கிழமை,
அசல் வழக்கு எண்.7/2020
[CNR No:TNTT06- 000008-2020]
-----

1) குருசாமி
2) ஜெயலட்சுமி (இறப்பு)
3) சுபா
4) அருணாசலகனி
5) லாவண்யா ...வாதிகள்
(இ.ம.எண்.593/2021 மனு 02.12.2021 ம் தேதி அனுமதிக்கப்பட்டதன் பேரில் இறந்துபோன 2 ம்வாதியின் வாரிசுகளாக 3 முதல் 5 வாதிகள் இவ்வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டு பிராது சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது)

/எதிர்/

1) சேர்மகனி (இறப்பு)
2) வாசகுமார்
3) காளியம்மாள்
4) வாசலட்சுமி ...பிரதிவாதிகள்
(இ.ம.எண்.593/2021 மனு 02.12.2021 ம் தேதி அனுமதிக்கப்பட்டதன் பேரில் இறந்துபோன 1 ம்பிரதிவாதியின் வாரிசாக 4 ம்பிரதிவாதி இவ்வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டு பிராது சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது)

இவ்வழக்கு 09.03.2026 அன்று என்முன்பு இறுதி விசாரணைக்கு வரப்பெற்று வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.மகேந்திரகுமார் அவர்கள் ஆஜராகியும், 1 ம்பிரதிவாதி வழக்குவிசாரணையின் போது இறந்துவிட்டதாக 16.09.2021 ம் தேதி குறிப்பாணை தாக்கல் செய்தும், 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.கதிர்வேல் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.03.23 16:32:18 +0530

வாதங்களை கேட்டும், சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இவ்வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>**தீர்ப்புரை**</u>

**1)** சமூகம் நீதிமன்றம் உத்தரவிடும் குறிப்பிட்ட நாட்களுக்குள் பிரதிவாதிகள் வழக்கு 2ம்தபசிலில் உள்ள தங்களது பொருட்களை எடுத்துக்கொண்டு அதன் காலி அனுபவத்தை வாதிகள் வசம் ஒப்படைக்கும்படி ஒரு செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் மற்றும் இவ்வழக்கின் செலவுத்தொகை கேட்டும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>**2) வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்–**</u>

1வது தபசில் சொத்து 1ம்வாதிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டு, அவரது பெயரில் பட்டா உள்ளது. ஷை தபசிலின் கிழக்கு பகுதியில் வாதிகள் 1984ம் வருடம் வீடு கட்டி, அதன் கதவு எண்.97E மற்றும் D ல் குடியிருந்து வந்து தீர்வை செலுத்தி வருகிறார்கள். வீடு போக எஞ்சியுள்ள மனை 2ம்தபசில் ஆகும். ஷை 2ம்தபசிலின் தென்புறம் வாதிகளால் கட்டப்பட்ட குளியலறை உள்ளது. மேற்படி குளியலறை பாக்கியுள்ள நிலத்தில் வாதிகள் மாட்டுக்கொட்டகை அமைத்திருந்தனர். 1ம்பிரதிவாதி ஏழ்மை நிலையில் இருந்து வந்ததால், தனது ஆடு, மாடுகளை கட்டுவதற்கு கொட்டகை எதுவும் இல்லை என்றும், நெருங்கிய உறவினர்கள் யாரும் உதவவில்லை என்று வாதிகளிடம் 2000ம் வருட வாக்கில் கூறி அழுததால், வாதிகள் ஷை மனைக்கு எவ்வித வாடகையும் செலுத்த வேண்டாம் என்றும், வாதிகள் கூறும் தருணத்தில் தபசிலை காலி செய்து அனுபவத்தை வாதிகள் வசம் ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டு, அதனை 1, 2 பிரதிவாதிகள் ஏற்றுக்கொண்டு 2000ம் ஆண்டு சித்திரை மாதம் முதல் 2ம்தபசிலை மாட்டுகொட்டகையாக பயன்படுத்தி வருகிறார்கள். அதற்கு அனுமதி தொகையோ, வாடகையோ, குத்தகை பணமோ வாதிகள் பெற்றுக்கொண்டதில்லை. 1, 2 வாதிகளின் மக்களுக்கு திருமணம்

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.03.23 16:32:31 +0530

முடிந்து குடும்பம் பெரியதாகிவிட்டதால், 2ம்தபலில் கூடுதல் அறை கட்டுவதற்காக வாதிகளுக்கு தேவைப்படுவதாலும், 1, 2 பிரதிவாதிகள் மாடுகளை விற்றுவிட்டார்கள் என்பதாலும், 2ம்தபசிலை காலி செய்து அனுபவத்தை வாதிகள் வசம் தருமாறு 2019ம் ஆண்டு சித்திரை மாதம் 1, 2 பிரதிவாதிகளிடம் கூறியதில் அவர்கள் காலி செய்துவிடுவதாக கூறி காலம் கடத்தி வந்ததால், வாதிகள் 2ம்தபசிலை பொறுத்து 1, 2பிரதிவாதிகளுக்கு கொடுத்த அனுபவ அனுமதியை 06.11.2019ம் தேதி ரத்து செய்து காலி அனுபவத்தை ஒப்படைக்க கோரி அறிவிப்பு அனுப்பியதை, 07.11.2019ல் பெற்றுக்கொண்டு தவறான சங்கதிகளை கூறி மறுப்பு அறிவிப்பு அனுப்பினார். அதில் 2ம்தபசிலானது 1ம்பிரதிவாதியின் மனைவியும், 2ம்பிரதிவாதியின் தாயாருமான 3ம்பிரதிவாதிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்று கூறியுள்ளதால் அவர் 3ம்பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றும், வழக்கு தாக்கல் செய்த பின்பு 2ம்வாதி 05.04.2020ம் தேதி இறந்துவிட்டதால் அவரது வாரிசுகள் கட்சி சேர்க்கப்பட்டும், 1ம்பிரதிவாதி 03.05.2021ம் தேதி இறந்துவிட்டதால் அவரது வாரிசுகள் கட்சி சேர்க்கப்பட்டு பிராது சீர்திருத்தம் செய்யப்பட்டு, 2ம்தபசிலை பிரதிவாதிகள் காலி செய்து அனுபவத்தை வாதிகள் வசம் ஒப்படைக்க வேண்டி பிரதிவாதிகளுக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளார்.

**3) 3ம்பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்–**

(3ம்பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை 2, 4 பிரதிவாதிகள் ஏற்றுக்கொள்வதாக குறிப்பாணை தாக்கல் செய்துள்ளார்கள்)

பிராது 2 வது தபசில் சொத்தும், அதனோடு சேர்ந்த வேறும் 3ம்பிரதிவாதிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்தாகும். அதில் பிரதிவாதி வகையறாக்கள் கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்னரே செட் அமைத்து தொழுவமாக பயன்படுத்தி நாளது தேதி வரை தொடர்ந்து அனுபவம் செய்து வந்து, அதற்கு வரியும் செலுத்தி

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.03.23 16:32:37 +0530

வருகிறார்கள். அதில் வாதிகள் மாட்டுக்கொட்டகை அமைத்து பயன்படுத்த பிரதிவாதிகளுக்கு அனுமதி கொடுத்ததாக கூறுவது உண்மையல்ல என்றும், பிராது 2வது தபசில் சொத்தும், வேறும் 3ம்பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு, அதில் பிரதிவாதிகள் மாட்டுக்கொட்டகை அமைத்து அனுபவம் செய்து வருவதை மறைத்தும், சுவாதீன பரிகாரம் கோராமலும் தாக்கல் செய்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், வாதிகளின் வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், விளம்புகை பரிகாரம் கோராமல் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று வழக்கை தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

**<u>4) வாதிகளின் வழக்குரை மற்றும் பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை ஆகியவைகளின் அடிப்படையில் இவ்வழக்கில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டது–</u>**

1) 2ம்தபசில் சொத்திலிருந்து காலி செய்து வழக்கு சொத்தை வாதிகள் வசம் ஒப்படைக்க பிரதிவாதிகளுக்கு எதிராக கோரிய செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?

2) விளம்புகை பரிகாரம் கோராமல் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோருவதால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளதா?

3) வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?

**5) இவ்வழக்கில்,** வாதிகள் தரப்பு வழக்கிற்கு ஆதரவாக 1ம்வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பு வழக்கிற்கு ஆதரவாக 3ம்பிரதிவாதி பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு பி.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் பிரதிவாதிகள் தரப்பு வழக்கிற்கு கூடுதல் ஆதரவாக 4ம்பிரதிவாதி பி.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு பி.சா.ஆ.2, பி.சா.ஆ.3 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் தரப்பில்

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY
Date: 2026.03.23 16:32:46 +0530

எழுத்துப்பூர்வ வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

## நீதிமன்ற பரிசீலனையும், தீர்வுகளும்

### 6) 1 வது எழுவினாக்கான தீர்வு–

**6(1)** பிராது 1ம்தபசில் சொத்து வாதிக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்டது என்றும், பட்டா வாதியின் பெயரில் உள்ளது என்றும், 1ம்தபசில் சொத்தின் கிழக்கு பகுதியில் வாதிகள் 1984ம் ஆண்டு கட்டிய வீட்டில் நாளது தேதி வரை வசித்து வருகிறார்கள் என்றும், அதன் கதவு எண்.97E மற்றும் D என்றும், வீடு போக 1ம்தபசிலில் எஞ்சியுள்ள மனையை 2ம்தபசில் ஆகும். 2ம்தபசில் தென்புறம் வாதிகளால் கட்டப்பட்ட குளியலறை உள்ளது என்றும், குளியலறை போக பாக்கி உள்ள நிலத்தில் வாதிகள் மாட்டுக்கொட்டகை அமைத்திருந்தனர் என்றும், பிரதிவாதி விவசாய கூலி ஏழ்மை நிலையில் அவரது ஆடு மாடுகளை கட்டுவதற்கு கொட்டகை ஏதும் இல்லை என்றும், நெருங்கிய உறவினரும் உதவவில்லை என்றும், வாதிகளிடம் 2000ம் வருட வாக்கில் வாதிகளிடம் கூறி அழுது கண்ணீர் வடித்ததால் வாதிகள் பொறுக்க இயலாமல் 2ம்தபசில் மாட்டுக்கொட்டகையை பயன்படுத்த அனுமதித்தார்கள் என்றும், 2ம்தபசில் சொத்திற்கு எவ்வித வாடகையும் செலுத்த வேண்டாம் என்றும், வாதிகள் கூறும்போது தபசிலை காலி செய்து வாதிகள் வசம் ஒப்படைத்துவிட வேண்டும் என்ற நிபந்தனை விதித்தார்கள் என்றும், இருதரப்பினரும் ஒப்புக்கொண்டு, 2000ம் ஆண்டு சித்திரை மாதம் முதல் வாதிகளின் அனுமதியுடன் 2ம்தபசில் மாட்டுக்கொட்டகையை பயன்படுத்தி வருகிறார் என்றும், வாதிகள் 2019ம் ஆண்டு சித்திரை மாதம் முதல் பிரதிவாதிகள் காலி செய்து அனுபவம் ஒப்படைக்க கேட்ட போது ஒப்படைக்காததால் 06.11.2019ம் தேதி 1, 2 பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பி பெற்றுக்கொண்டு 13.11.2019ம் தேதி பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றும், பதில் அறிவிப்பில் 2ம்பிரதிவாதியின்

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.03.23 16:32:57 +0530

தாயாரான 3ம்பிரதிவாதிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என கூறியுள்ளதால் அவரை 3ம்பிரதிவாதியாக கட்சி சேர்த்து, 1ம்பிரதிவாதி 2 முதல் 4 பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டு விட்டு 03.05.2021ல் காலம் சென்றுவிட்டார் என்றும், தாவா 2ம்தபசில் சொத்தை வாதிகளுக்கு காலிசுவாதீனம் ஒப்படைக்க செயலுறுத்துக்கட்டளை கோரி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

**6(2)** 3ம்பிரதிவாதி எதிர்வழக்குரையில் பிராது சங்கதிகளை குறிப்பிட்டு மறுத்துரைத்து 2ம்தபசில் கண்ட சொத்தும், அதனுடன் சேர்ந்த வேறும் 3ம்பிரதிவாதிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்தாகும். பிரதிவாதிகள் கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்னரே செட் அமைத்து தொழுவமாக பயன்படுத்தி நாளது தேதி வரை தொடர்ந்து அனுபவித்து வந்து அதற்கு வரியும் செலுத்தி வருகிறார்கள். வாதிகள், பிரதிவாதிகளுக்கு அனுமதி கொடுத்ததாக சொல்வது உண்மையல்ல. சுவாதீன பரிகாரம் கோராமல் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், விளம்புகை பரிகாரம் கோராமல் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

**6(3)** 1ம்வாதி வா.சா.1 ஆக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து சாட்சியம் அளித்து நத்தம் நிலவரித்திட்ட துாய சிட்டா வா.சா.ஆ.1 ஆகவும், புல வரைபடம் வா.சா.ஆ.2 ஆகவும், தீர்வை ரசீதுகள் வா.சா.ஆ.3, வா.சா.ஆ.7 ஆகவும், 06.11.2019ம் தேதியிட்ட வழக்கு அறிவிப்பு வா.சா.ஆ.4 ஆகவும், ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.5 ஆகவும், பதில் அறிவிப்பு வா.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்து சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.1 குறுக்குவிசாரணையில் **"வழக்கு 2ம்தபசில் சொத்தில் நான் மாட்டுத்தொழுவம் அமைத்ததை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. எந்த தேதியில் 1ம்பிரதிவாதிக்கு 2ம்தபசில் சொத்தை பயன்படுத்த அனுமதி**

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.03.23 16:33:05 +0530

**கொடுத்தோம் என்று சொல்லவில்லை என்றால் வருடம் சொல்லியுள்ளோம் தேதி சொல்லவில்லை. வா.சா.ஆ.3 தீர்வை ரசீது நான் வசித்து வரும் வீட்டிற்குரியது என்றால் சரிதான். வழக்கு சொத்து எனக்கு பரம்பரை பரம்பரையாக பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம்."** 20.08.2024ம் தேதியிட்ட குறுக்குவிசாரணையில் **"எனது தாத்தா பெயர் என்னவென்றால் சங்கரலிங்கம். வழக்கு சொத்து சங்கரலிங்கத்திற்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். எனது அப்பா அருணாசலம் அவருடன் உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர்கள் என்றால் 4 ஆண்கள், 4 பெண்கள். சங்கரலிங்கத்தின் 4 மக்களுக்கும் பாத்தியம் என்றால் சரிதான். சங்கரலிங்கத்தின் மக்கள் உயிருடன் இருக்கிறார்களா என்றால் இறந்துவிட்டார்கள் அவரது வாரிசுகள் இருந்து வருகிறார்கள். இந்த பிரதிவாதிகள் எதிர்கட்சியாக சேர்த்துள்ளவர்கள் எனக்கு என்ன முறை என்றால் தங்கை முறை. தங்கை முறை என்பது தாத்தா சங்கரலிங்கத்தின் வழி வந்த வாரிசு என்றால் சரிதான்"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**6(4)** 3ம்பிரதிவாதி பி.சா.1 ஆக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து 2ம்தபசிலுக்கு செலுத்தியுள்ள தீர்வை ரசீதுகள் பி.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளார். பி.சா.1 குறுக்குவிசாரணையில் **"தாவா 2ம்தபசில் சொத்திற்கு தெற்கு பக்கம் வாதியின் பாத்ரூம், கல்யாணி வீடு என்றால் சரிதான். எனது எதிர்வழக்குரையில் மாட்டுக்கொட்டகைக்கு கதவு எண் இருப்பதாகவோ, தீர்வை செலுத்தியதாகவோ சொல்லவில்லை என்றால் கதவு எண் இருப்பதாக சொல்லவில்லை, தீர்வை இருப்பதாக சொல்லியுள்ளேன்"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**6(5)** பி.சா.2 ஆக 4ம்பிரதிவாதி நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து, கதவு எண்.7/81 வீட்டிற்குரிய ரசீது பி.சா.ஆ.2 ஆகவும், ஆதார் அடையாள அட்டை நகல் பி.சா.ஆ.3 ஆகவும் தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார்.

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY
Date: 2026.03.23 16:33:15 +0530

பி.சா.2 குறுக்குவிசாரணையில் **"தாவா சொத்து வடக்கு பார்த்து அமைந்த மாட்டுத்தொழுவம் என்றால் சரிதான். எனக்கு வயது 40. 45 வருடங்களுக்கு முன்பு எங்கள் குடும்பத்தில் என்ன நடந்தது என்பது பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எதிர்வழக்குரை மற்றும் பதிலறிவிப்பில் தாவா சொத்திற்குரிய பட்டா குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**6(6)** வாதிகள் தரப்பு எழுத்துப்பூர்வ வாதுரையில் 2ம்தபசில் சொத்தில் உள்ள பிரதிவாதிகளை காலி செய்து அனுபவத்தை ஒப்படைக்க செயலுறுத்துக்கட்டளை கோரியுள்ளதால் வாதிகளின் உரிமைக்கு பங்கம் இல்லை என்ற அடிப்படையில் விளம்புகை பரிகாரம் கோரவில்லை, சுவாதீன பரிகாரம் கோரவில்லை என்றும், வழக்கை அனுமதிக்க கோரியுள்ளார்.

**6(7)** பிரதிவாதிகள் தரப்பு எழுத்துப்பூர்வ வாதுரையில் பி.சா.1 நிரூபண வாக்குமூலத்தில் அவரது தந்தை பெயர் வாலாண்டி. வாலாண்டியின் தந்தை பெயர் சங்கரலிங்கம், வாலாண்டியும், 1ம்வாதியின் தந்தை அருணாசலமும் உடன்பிறந்தவர்கள் ஆவார்கள் என்றும், தபசில் சொத்தை பொறுத்து உரிமை பிரச்சனை உள்ள நிலையில் விளம்புகை பரிகாரம் கோராமல் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோருவது நிலைநிற்கத்தக்கதல்ல. வாதிகளின் அனுமதியின் பேரில் குடியிருந்து வந்ததாக கூறுவதை நிரூபணம் செய்யப்படாத நிலையில் நீதிமன்ற கட்டணச்சட்டப்பிரிவு 25(a)ன்படி சுவாதீன பரிகாரம் கோராமல் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், தாவா சொத்தின் கிழமேல் மற்றும் தென்வடல் அளவுகள் துலங்காததால் சொத்து விவரம் சரியாக விவரிக்கப்படாத நிலையில் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று வழக்கை தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.03.23 16:33:23 +0530

**6(8)** இருதரப்பு வாதுரைகள், சாட்சிகள், சான்றாவணங்களை பரிசீலனை செய்ததில் தாவா 1ம்தபசில் சொத்து வாதிகளின் தாத்தா சங்கரலிங்கம் என்பவருக்கு பூர்வீகமாக பாததியப்பட்ட சொத்து என்பது வாதிகள், பிரதிவாதிகள் தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டது. 2ம்தபசில் சொத்து வடக்கு பார்த்த மாட்டுத்தொழுவம் என்பது வாதிகள், பிரதிவாதிகள் தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாகும். 2ம்தபசில் சொத்திற்கு தெற்கு பக்கம் வாதிகளின் பாத்ரூம் கட்டப்பட்டுள்ளது என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. 1ம்வாதியின் சகோதரி 3ம்பிரதிவாதி என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள சங்கதியாகும். 2ம்தபசில் சொத்தை பிரதிவாதிகள் தொழுவமாக பயன்படுத்தி வருகிறார்கள் என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாகும். வாதிகள் தரப்பில் கடந்த 2000ம் ஆண்டு பிரதிவாதிக்கு 2ம்தபசில் சொத்தை எவ்வித வாடகையும் இன்றி கேட்கும்போது காலி செய்து அனுபவத்தை ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் பிரதிவாதிகள் தாவா 2ம்தபசில் சொத்தை பயன்படுத்த அனுமதித்தார் என்பது நிரூபித்துள்ளாரா என்று பார்க்கும்போது தாவா சொத்திற்குரிய நத்தம் நிலவரித்திட்ட துாய சிட்டா 1ம்வாதியின் பெயரில் தாக்கல் செய்துள்ளார். 2ம்தபசில் சொத்து பிராது 1ம்தபசில் சொத்தின் ஒரு பகுதி என்று பிராதில் விவரிக்கப்படவில்லை. முதல் தபசில் சொத்தின் மேற்கு பக்கம் 2ம்தபசில் இருப்பதாக விவரித்துள்ளார். தாவா சொத்து சங்கரலிங்கத்திற்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து, அவரது 4 மக்களுக்கு பங்குரிமை உண்டு என்பதையும் வா.சா.1 சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளார். 4 மக்களின் வாரிசுகள் தற்போது இருந்து வருவதாகவும் சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளார். 3ம்பிரதிவாதி சங்கரலிங்கத்தின் வழி வந்த வாரிசு என்பதையும் ஒப்புக்கொண்டுள்ளார். இந்நிலையில் தாவா 1, 2 தபசில் சொத்து 1ம்வாதிக்கும், அவரது தந்தை அருணாசலத்திற்கும் எந்த தேதியில் பாகம் பிரித்ததில் கிடைக்கப்பெற்றது என்பதை விவரிக்கப்படாமல் தாவா சொத்து

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.03.23 16:33:30 +0530

சங்கரலிங்கத்திற்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டு அவரது 4 மக்களுக்கு பங்கு கிடைக்கத்தக்கது என்பதை ஒப்புக்கொண்டு அவரது வழி வந்த வாரிசுகள் பிரதிவாதிக்கு எதிராக தாவா சொத்தை அனுபவம் செய்வதற்கு அனுமதி கொடுத்ததாக வாதிகள் தரப்பில் பிரதிவாதிகளை வெளியேற்ற செயலுறுத்துக்கட்டளை கோரியிருப்பது தாவா சொத்தில் 1ம்வாதிக்கும், 3ம்பிரதிவாதிக்கும் பங்குரிமை இருந்து வரும் நிலையில், தாவா 1, 2 தபசில் சொத்து வாதிக்கு உரிமை பிரச்சனையை முடிவு செய்யாமல் வாதிகள் கோரும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று பிரதிவாதிகள் தரப்பில் வாதுரையின் போது தாக்கல் செய்த முன்தீர்ப்பு **மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை – Basheer Ahamed and Others /VS/ M.Hayath Raja and Others – (2021) 2 LW 193 -**

> Whether admittedly the 1st defendant is not the co-owner did not produce any document of title, whether the lower Appellate Court is right in deciding that the suit for mandatory injunction without declaration is not maintainable under “section 34” of Specific Relief Act, 1963?
>
> The first question of law will have to be necessarily answered against the appellants inasmuch as they do not have absolute right over the suit property in order to enable them to claim a decree for mandatory injunction. The fact that the first defendants father is a co-owner is admitted. The plaintiffs have not sought for declaration that they are not the absolute owners of the property. Unless the plaintiffs are in a position to seek relief of declaration, I do not think that the Court will be justified in granting a relief of mandatory injunction in favour of the plaintiffs. Hence the second question of law is answered against the appellants.

**6(9)** மேற்படி முன்தீர்ப்பின் அடிப்படையில் இந்த வழக்கின் பொருண்மையுடன் சார்ந்ததாக உள்ளது. தாவா சொத்து வாதிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்பதும், 3ம்பிரதிவாதி சங்கரலிங்கத்தின் வழி வந்த வாரிசுகள் என்பதும் ஒப்புக்கொண்டிருப்பதால் தாவா சொத்து வாதிக்கு

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.03.23 16:33:41 +0530

முழுமையாக பாத்தியப்பட்ட சொத்து என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யப்படாததால் கூட்டு உரிமையாளரான 3ம்பிரதிவாதிக்கு எதிராக விளம்புகை பரிகாரம் கோராமல் செயலுறுத்துக்கட்டளை மட்டும் கோரி தாக்கல் செய்துள்ள வழக்கு வாதிகளுக்கு தாவா சொத்தில் இருந்து பிரதிவாதிகளை வெளியேற்ற கோரும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் நிலைக்கத்தக்கதல்ல என்பதால் தாவா 2ம்தபசில் சொத்திலிருந்து பிரதிவாதிகளை வெளியேற்ற கோரும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று 1வது எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

**<u>7) 2 வது எழுவினாக்கான தீர்வு–</u>**

**7(1)** தாவா சொத்து வாதிகளுக்கு பரம்பரை பரம்பரையாக பாத்தியப்பட்ட சொத்து என்றும், பிரதிவாதிகளுக்கு 2ம்தபசில் சொத்தை அனுபவம் செய்வதற்கு 2000ம் ஆண்டு அனுமதி கொடுத்ததன் அடிப்படையில் அனுபவம் செய்து வருவதால் வாதிகள், பிரதிவாதிக்கு 2ம்தபசில் சொத்தை பொறுத்து கொடுத்த அனுமதியை வா.சா.ஆ.4 வழக்கறிஞர் அறிவிப்பில் 06.11.2019ம் தேதியிட்ட அறிவிப்பு மூலம் முடிக்கப்பட்டதால் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதிகள் வா.சா.ஆ.6 பதில் அறிவிப்பிலேயே பிராது 2ம்தபசில் சொத்தும், வேறும் 1ம்பிரதிவாதியின் மனைவி, 2ம்பிரதிவாதியின் தாயாரான காளியம்மாள் என்பவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்றும், அதில் பிரதிவாதிகள் வகையறாக்கள் 40 வருடங்களுக்கு முன்னர் செட் அமைத்து தொழுவமாக பயன்படுத்தி வருவதால் அதில் 25 x 13 அடி அளவில் ஓட்டு சாய்ப்பு அமைத்துள்ளதாக கட்சி செய்து எதிர்வழக்குரையில் பதில் அறிவிப்பு சங்கதிகளின் படி எதிர்கட்சி செய்து கூறுவதாக விளம்புகை பரிகாரம் கோராமல் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் நிலைக்கத்தக்கதல்ல என்றும், சுவாதீன மீட்பு பரிகாரம் கோராமல் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோருவது நிலைக்கத்தக்கதல்ல என்று

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY
Date: 2026.03.23 16:33:48 +0530

கூறியுள்ளார். வா.சா.1 தனது குறுக்குவிசாரணையில் வாதிகளின் தாத்தா சங்கரலிங்கத்திற்கு பூர்வீக வழியில் பாத்தியப்பட்ட சொத்து, அவரது 4 மக்களுக்கும் உரிமை உள்ளது என்றும், அவரது 4 மக்களின் வாரிசுகள் தற்போது இருந்து வருகிறார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். வாதிகளுக்கு தாவா சொத்து தனித்து உரிமைப்பட்ட சொத்து என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். 2ம்தபசிலில் மாட்டுத்தொழுவம் அமைத்ததற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். வாதிகள் தாவா சொத்து அவருக்கு உரிமைப்பட்டது என்பதை நிரூபித்து, எந்த தேதியில் பிரதிவாதிகளுக்கு அனுமதியின் பேரில் அனுபவித்து வந்தார்கள் என்பதை நிரூபிக்காமல் வாதிகள் கோரும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று மேற்படி 1வது எழுவினாவிற்கு தீர்வு கண்டிருப்பதால் தாவா சொத்து உரிமை பிரச்சனை வாதிகள், பிரதிவாதிகளுக்கு இடையே இருந்து வருவதால் பிரதிவாதிகள் தரப்பு வாதுரையின் போது **மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் – Chinna Nachiappan and another /Vs/ PL.Lakshmanan – 2007 (4) CTC 70**

> <u>Specific Relief Act, 1963 (47 of 1963), Sections 34 & 38 – Code of Civil Procedure, 1908 (5 of 1908), Order 2, Rule 2 –</u> Permanent Injunction – Practice and Procedure – Permissibility of seeking for relief of permanent injunction alone without seeking a relief of declaration – When plaint itself refers to serious title disputes between Plaintiff and the Defendant, Plaintiff cannot seek for a bare permanent injunction and ought to pray for declaration of title also – Suit, held, bad for absence of prayer for declaration of title.

**7(2)** தாவா சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோராமல் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியிருப்பது பிரதிவாதிகள் அவரது அறிவிப்பான வா.சா.ஆ.6ல் 25 X 13 அடி அளவில் மாட்டுக்கொட்டகை அமைத்திருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. பிராதில் 2ம்தபசில் சொத்து

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.03.23 16:33:58 +0530

விவரத்தில் 20 x 13 அளவுகள் மட்டும் சொல்லப்பட்டு, தென்வடல் மற்றும் கிழமேல் என்று குறிப்பிடாமல், சர்வே எண் குறிப்பிடாமல் அளவுகளும் தவறாக குறிப்பிடப்பட்டிருப்பதால் பிரதிவாதிகள் தரப்பில் வாதுரையின் போது தாக்கல் செய்த முன்தீர்ப்பு **மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளை – Arulmighu Kothandaramasamy Koil, Thrupuvanam /Vs/ Vairam – (2012 (1) CTC 708**

<u>Code of Civil Procedure, 1908 (5 of 1908), Order 7, Rule 3 – Specific Relief Act, 1963 (47 of 1963), Section 39</u> – Proper decription of suit property – Suit for relief of mandatory injunction for removal of construction in respect of immovable suit property – Held, Plaint ought to contain proper decription of suit property so as to identify same – Except for three Survey Numbers and its extent, details regarding breadth and length of alleged constructions not contained in Plaint -Plaint completely lacking proper description of suit property so as to identify same – Held, if decree of mandatory injunction granted, it cannot be executed nor enforced as contemplated under Section 39 of Specific Relief Act – Opportunity given to Appellant to amend Plaint suitably and matter remanded back to Trial Court.

**7(3)** தாவா 2ம்தபசில் சொத்தில் பிரதிவாதிகள் மாட்டுத்தொழுவமாக அனுபவம் செய்து வருவதை வாதிகள் வழக்குரையில் ஒப்புக்கொண்டு விட்டு 2ம்தபசில் சொத்து வாதிகளின் அனுபவத்தில் இல்லை என்பதை ஒப்புக்கொண்டு வாதிகள், பிரதிவாதிக்கு 2000ம் ஆண்டு அனுமதி கொடுத்து பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருவதாகவும் கூறுவதை வாதிகள் தரப்பில் நிரூபித்து போகாததால் தாவா சொத்திலிருந்து வாதிகள் அனுபவத்தில் இருந்து வரப்படாததால் **மாண்புமிகு உச்ச நீதிமன்றம் – Executive Officer, Arulmigu Chokkanatha Swamy Koil Trust Virudhunagar /Vs/ Chandran – (2017) AIR (SC) 1034**

Specific Relief Act, 1963 – Section 34 – Suit for declaration and Permanent injunction – Maintainability – Plaintiff who was not in possession, had in suit claimed only declaratory relief along with

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.03.23 16:34:06 +0530

| |
|---|
| mandatory injunction – Plaintiff being out of possession, relief of recovery of possession was a further relief which ought to have been claimed by plaintiff – Suit filed by plaintiff for a mere declaration without relief of recovery of possession was clearly not maintainable. |

**7(4)** மேற்படி முன்தீர்ப்பின் அடிப்படையில் தாவா சொத்தில் வாதிகள் அனுபவத்தில் இருந்து வராத நிலையில் தாவா சொத்து குறித்து உரிமை பிரச்சனை வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் இருந்து வந்திருப்பதால் தாவா சொத்தை பொறுத்து வாதிகள் விளம்புகை பரிகாரம் கோராமலும், சுவாதீன மீட்பு பரிகாரம் கோராமலும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் பிரதிவாதிகளுக்கு எதிராக கோரியுள்ளது தாவா 2 ம்தபசில் சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோராமல் தாக்கல் செய்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று 2 வது எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

**<u>8) 3 வது எழுவினாக்கான தீர்வு –</u>**

1, 2 எழுவினா வாதிகளுக்கு எதிராக தீர்வு கண்டுள்ள நிலையில் வேறு எந்த பரிகாரமும் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று 3 வது எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

**9) இறுதியாக,** வாதிகளின் வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் எழுதி விரிவாக்கம் செய்து கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 23.03.2026 இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.03.23 16:34:14 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி.

**வாதிகள் தரப்பு சாட்சி–**

வா.சா.1 – குருசாமி

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்–**

| | |
|---|---|
| வா.சா.ஆ.1 | 1ம்வாதி பெயரிலான நத்தம் நிலவரி திட்ட தூய சிட்டா உண்மை நகல் |
| வா.சா.ஆ.2 | தபசிலுக்கான புல வரைபடம் உண்மை நகல் |
| வா.சா.ஆ.3 | 1ம்தபசிலுக்கான தீர்வை ரசீதுகள் 19 எண்ணம் |
| வா.சா.ஆ.4 | 06.11.2019ம் தேதிய வாதிகளின் வழக்கு அறிவிப்பு அலுவலக நகல் |
| வா.சா.ஆ.5 | அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் எண்ணம் 2 |
| வா.சா.ஆ.6 | 13.11.2019ம் தேதிய 1, 2 பிரதிவாதிகளின் மறுப்பு அறிவிப்பு |
| வா.சா.ஆ.7 | தபசிலுக்கான தீர்வை ரசீதுகள் 16 எண்ணம் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் –**

பி.சா.1 – காளியம்மாள்

பி.சா.2 – வாசலட்சுமி

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் –**

| | |
|---|---|
| பி.சா.ஆ.1 | 2வது தபசில் உள்ள தொழுவத்திற்கு 3ம்பிரதிவாதி செலுத்தியுள்ள வரி ரசீதுகள் எண்ணம் 5 |
| பி.சா.ஆ.2 | கதவு எண்.7/81 வீட்டு வரி ரசீது இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்டது |
| பி.சா.ஆ.3 | 3ம்பிரதிவாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் |

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.03.23 16:34:21 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
கோவில்பட்டி,
அ.வ.எண்.7/2020
[CNR No.TNTT06-000008-2020]
வரைவு/நேரிய/தீர்ப்புரை
நாள்-23.03.2026